விருதுநகர் இந்து நாடார்கள் செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி),
தேசிய தர மறுமதிப்பீட்டின் கீழ் 'ஏ' அந்தஸ்து தகுதி பெற்றது
குறைந்த கட்டணத்தில் உயர்தரக் கல்வி
விருதுநகர்.

ESTD : 1947

*****

22.06.2023

சுற்றறிக்கை

நமது கல்லூரிக்கு மோட்டார் சைக்கிளில் வரும் மாணவ/மாணவியர்கள் கீழ்க்கண்ட நடைமுறைகளைப் கண்டிப்பாக பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

1. மாணவ/மாணவியர்கள் தங்களுடைய ஒட்டுநர் உரிமம் இல்லாமல் கல்லூரிக்கு மோட்டார் சைக்கிளில் வருவதற்கு அனுமதி கிடையாது.
2. மோட்டார் சைக்கிளில் வரும் மாணவ/மாணவியர்கள் கண்டிப்பாக தலைக்கவசம் அணிந்து வர வேண்டும்.
3. மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேல் கண்டிப்பாக எப்பொழுதும் செல்லக்கூடாது என்று அறிவுறுத்தப்படுகின்றது.
4. மோட்டார் சைக்கிளில் செல்லும்பொழுது குறைவான வேகத்தில் மட்டுமே செல்ல வேண்டுமென தெரிவிக்கப்படுகின்றது.
5. உணவு இடைவேளை நேரத்தில் கல்லூரி வளாகத்திற்குள் இரு சக்கர வாகனத்தில் செல்ல அனுமதி இல்லை.
6. தங்கள் இருசக்கர மோட்டார் வாகனத்தை கல்லூரி அலுவலகத்தில் பதிவு செய்யாத மாணவ/மாணவியர்களுக்கு கல்லூரிக்கு இருசக்கர மோட்டார் வாகனத்தில் வருவதற்கு அனுமதி கிடையாது. புதிதாக இருசக்கர மோட்டார் வாகனத்தில் வர விரும்பும் மாணவ/மாணவியர் விண்ணப்பம் செய்து அனுமதி பெற்ற பின் தான் வாகனத்தில் வர அனுமதிக்கப்படுவார்கள்.
7. மாணவ/மாணவியர்கள் மோட்டார் சைக்கிளை மாலை கல்லூரி முடிந்த பின்பு 3.30 மணிக்கு மேல் தான் வெளியே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.
8. மாணவ/மாணவியர்கள் தங்களது இரு சக்கர வாகனத்தை அதற்கென ஒதுக்கப்பட்ட மாணவ/மாணவியர்கள் வாகன நிறுத்தத்தில் மட்டுமே வரிசையாக நிறுத்த வேண்டும். ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலோ அல்லது கல்லூரி வளாகத்திற்குள் வேறு எங்கும் மற்றும் கல்லூரிக்கு வெளியே ,வேறு எங்கும் தங்கள் வாகனத்தை கண்டிப்பாக நிறுத்தக் கூடாது என இதன்மூலம் தெரிவிக்கப்படுகின்றது.
9. அருப்புக்கோட்டை சாலை நுழைவு வாயில் வழியாக இரு சக்கர வாகனத்தில் வர மாணவ, மாணவியர்களுக்கு கண்டிப்பாக அனுமதி கிடையாது. இரு சக்கர வாகனத்தில் வரும் மாணவ, மாணவியர்கள் பிரதான நுழைவு வாயிலை மட்டும் பயன்படுத்த வேண்டும்.

இதனை மீறுவோர் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கல்லூரி முதல்வர்

பெறுநர்

துறைத் தலைவர் மூலமாக மாணவ/மாணவியர்கள் வகுப்பறைச் சுற்றுக்கு &
துறை அறிவிப்புப் பலகைக்கு.